**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**
**முன்னிலை:திருமதி.R.D.குருலட்சுமி M.A.,M.L., PGDI & CL.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருப்புவனம்**
**2023ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11-ம் நாள் திங்கள்கிழமை**
**இ.ம.எண்.3/2022 இன் மு.வ.எண். 103/2019**

1. கருப்பு
2. அழகர் ....மனுதாரர்கள் சேர்க்கப்பட வேண்டிய 11,12 பிரதிவாதிகள்

-எதிர்-

1. மாயன் ... 1ம் எதிர்மனுதாரர் / வாதி

2. மா.கருப்புசாமி
3. மா.அழகச்சி
4. சின்னையன்
5. வள்ளி
6. வேலம்மாள்
7. ரா.க.ரா.கருப்புசாமி
8. ரா.க.ரா. அழகச்சி
9. ரா.க.ரா. ராமன்
10.ரா.க.ரா.கணேசன்
11. ரா.க.ரா.சின்னமருது ...2முதல்11 எதிர்மனுதாரர்கள்/ 1 முதல்10 பிரதிவாதிகள்

இம்மனு என்முன்பு 17.08.2023 அன்று இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர்கள்/சேர்க்கப்பட வேண்டிய 11,12 பிரதிவாதிகளுக்காக வழக்கறிஞர் திரு.சி.தங்கவேலன் திரு.வி.அனுசூர்யா ஆகியோர்கள் ஆஜராகியும், 1ம்எதிர்மனுதாரர்/வாதிக்காக வழக்கறிஞர் திரு.சி.இளமாரன், திரு.ஐ.சரவணன் திரு.எஸ்.ஜேம்ஸ்ராஜா, திரு.ஆர்.ராமசந்திரன் ஆகியோர்கள் ஆஜராகியும் 2ம்எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதிக்காக வழக்கறிஞர் திரு.எஸ்.பி.டி. சேதுராமச்சந்திரன், திரு.எஸ்.முருகன், திரு.எஸ்.சீனிவாசன் ஆகியோர்கள் ஆஜராகியும், 2 முதல் 11 எதிர்மனுதாரர்கள்/1 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் உரிய வாய்ப்பளித்தும் மறுப்புரை தாக்கல் செய்யப்படாததால் ஒருதரப்பாக்கப்பட்டும், இருதரப்பு வாதங்கள் கேட்டும், இருதரப்பு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

அசல் வழக்கில் மனுதாரர்கள்/சேர்க்கப்பட வேண்டிய 11,12 பிரதிவாதிகளை அசல் வழக்கில் சேர்க்க கோரி உ.ந.மு.ச கட்டளை 1 விதி 10(2)-ன் கீழ் மனு தாக்கல்.

**1) மனு அபிடவிட் சுருக்கம்:**

அசல் வழக்கானது அய்யம்மாளுக்கு வாதி மட்டுமே வாரிசு என காட்டி பொய்யான விபரங்கள் கூறி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவுடன் அய்யம்மாளின் கொடி ஜாபிதா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அய்யம்மாளின் மக்களான பெரியாம்பிள்ளை, சீர்காலன், அழகர்

R D GURULAKSHMI
Digitally signed by R D GURULAKSHMI
Date: 2023.09.11 17:22:49 +0530

உள்ளதில் மேற்படி மூவரும் இறந்துவிட்டதால் பெரியாம்பிள்ளை, சீர்காளனின் மகன்களான மனுதாரர்களுக்கு தாவா சொத்தில் பாக உரிமை உள்ளதால் அவசியமான தரப்பினராக சேர்த்துக்கொண்டு வழக்கை மேல்நடத்த வேண்டியது அவசியமாக உள்ளது. எனவே மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2) 1ம் எதிர்மனுதாரர் / வாதி தரப்பு மறுப்புரையின் சுருக்கம்:</u>**

மனு ஆட்சேபிக்கப்படுகிறது. மனுவில் கூறியுள்ள விவரங்களை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். மனுதாரர் தாக்கல் செய்துள்ள வம்சாவளி ஜாபிதா முழுமையாக இல்லை. 1ம் எதிர்மனுதாரரின் தாயார் காளிமுத்துவிற்கு பாத்தியப்பட்து என்பது உண்மை. மனுதாரர்கள் தாவா சொத்தை பொறுத்து அன்னியர்கள் ஆவார்கள். மனுதாரர் வேலி அமைத்து, வீடு கட்டி சட்ட காலத்திற்கு மேல் அனுபவித்து வருகிறார். ஏற்கனவே உள்ள 1முதல் 10-பிரதிவாதிகளுடன் கூட்டு சேர்ந்து பொய்யாக ஆவணங்கள் எதுவும் இல்லாமல் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1ம் மனுதாரர் தாவா சொத்துக்கள் மற்றும் வேறு சொத்துக்கள் சம்மந்தமாக 2-ம் மனுதாரர், 1-ம் எதிர்மனுதாரர் மற்றும் சிலர் மீது மு.வ.எண்.36/2022 தாக்கல் செய்துள்ளதால் இம்மனு நிலைநிற்கத்தக்கதல்ல. மனுவை தள்ளுபடி செய்யவேண்டும்.

**3)** இம்மனுவில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனையானது இம்மனுவை அனுமதிக்கலாமா என்பதே ஆகும்.

**4)** இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அய்யம்மாளின் மக்களான பெரியாம்பிள்ளை, சீர்காலன், அழகர் உள்ளதில் மேற்படி மூவரும் இறந்துவிட்டதால் பெரியாம்பிள்ளை, சீர்காலனின் மகன்களான மனுதாரர்களுக்கு தாவா சொத்தில் பாக உரிமை உள்ளதால் அவசியமான தரப்பினராக சேர்த்துக்கொண்டு வழக்கை மேல்நடத்த வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் எனவே மனுவை அனுமதிக்கக்கோரி வாதிடப்பட்டது. கற்றறிந்த 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர்கள் அய்யமாளின் வாரிசுகள் என்பதை காட்ட எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், மனுதாரர்கள் தேவையற்றவர்கள் என்றும், தாவா சொத்திற்கும்,மனுதாரர்களுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும், எனவே இம்மனுவை தள்ளுபடி செய்யக்கோரி வாதிடப்பட்டது.

5) அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்து மொத்தம் 4 ஏக்கர் 70 செண்ட் ஓடை புஞ்சை என்றும் அதில் வாதிக்கு கீழ்புறம் 0.94 செண்ட் என்றும் காட்டப்பட்டு பிராது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி தாக்கல் செய்துள்ள, பிராதிலேயே 6 முதல் 10 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்திற்கு மேல் புறம் உள்ள தானசெட்டில்மெண்ட் மூலம் பாத்தியபட்ட சொத்துக்கள் உள்ளதாகவும் சொல்லப்பட்டுள்ளது. ஆதி கூட்டு பட்டாதாரர்களான ராக்கம்மாள், பிச்சையம்பலம் வாரிசுகள் என்ற முறையில் 1 முதல் 5 பிரதிவாதிகள் பெயரில் பட்டா உள்ளதாக பிராதில் கூறப்பட்டுள்ளது. அசல் வழக்கை யாருக்கு எதிராக நடத்த வேண்டும் என்று தீர்மானிக்கும் உரிமை வாதிக்கு மட்டுமே உள்ளது என்றும், மனுதாரர்களுக்கு தாவா சொத்தில் உரிமை உள்ளது என்பதை காட்ட எந்த அடிப்படை ஆவணங்களும் மனுவுடன் தாக்கல் செய்யப்படாத நிலையில் இம்மனு நிலைநிற்கத்தக்கதல்ல என்ற 1ம் எதிர்மனுதாரர் தரப்பு வாதம் ஏற்றுக்கொள்ளத்தக்கது என்று

R D GURULAKSHMI
Digitally signed by R D GURULAKSHMI
Date: 2023.09.11 17:23:07 +0530

இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

6) அசல்வழக்கானது 3.3.2020ம் தேதியிட்டு விசாரணைப்பட்டியலில் போடப்பட்டு வாதி 9.11.2020ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்காக நிலுவையில் இருந்த நிலையில் மனுதாரர்கள் ஆணையர் நியமனம் கோரி இடை நிலை மனு எண்.1/2020 தாக்கல் செய்து அம்மனு அனுமதியாகி ஆணையர் நியமனம் செய்யப்பட்டு தாவா சொத்தை ஆணையர் பார்வையிட்டு, அறிக்கை வரைபடம் தாக்கல் செய்து 20.6.2023ம் தேதி முடிக்கப்பட்ட பின்பு மனுதாரர்கள் இம்மனுவை எந்த அடிப்படை ஆவணங்களும் இன்றி தாக்கல் செய்துள்ளனர். இதிலிருந்தே அசல் வழக்கை காலம் கடத்த வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

முடிவாக, மனு வாதி செலவுதொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து, பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2023-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 11-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

R D GURULAKSHMI

Digitally signed by R D GURULAKSHMI
Date: 2023.09.11 17:23:21 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்.

மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இல்லை-

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இல்லை

R D GURULAKSHMI

Digitally signed by R D GURULAKSHMI
Date: 2023.09.11 17:23:42 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்.